# முடிவுரை

## முடிவுரை

பெருங்கதை – இலக்கிய மதிப்பீடு என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வின்மூலம் பின்வரும் கருத்துக்கள் தெளிவுறுகின்றன.

- கொங்குநாட்டின் விசயமங்கலத்தில் வேளிர் என்ற இனத்தில் தோன்றியவர் கொங்குவேளிர்.
- சமண சமயத்தைச் சார்ந்த வேளிர், மிகவும் முயன்று 'பெருங்கதை' என்ற நூலை இயற்றினார்.
- இந்நூலின் தொடக்கமும், முடிவும், இடையிற் சிற்சில அடிகளும், சொற்களும் காணக்கிடைக்காத நிலையில் தொண்ணூற்று ஒன்பது காதைகள் மட்டும் கிடைத்துள்ளன.
- நிலைமண்டில ஆசிரியப்பாவால், காண்டம் மற்றும் காதைகள் தோறும் அந்தாதி அமைப்பைப் பெற்று 'என்' என முடிந்துள்ளது.
- மக்களிடம் வழக்கிலிருந்த கதையை அடிப்படையாகக் கொண்டு தமிழில் முதல் நூலாய் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.
- தண்டியலங்காரம் கூறுகின்ற பெருங்காப்பிய இலக்கணங்களுள் பெம்பான்மையானவற்றைப் பெற்றுத் திகழ்கிறது.
- கதையை வளர்ப்பதற்கேற்பக் கதைப்பின்னல் காரணகாரியத்துடன் பின்னப்பட்டு அமைந்துள்ளது.
- பெருங்கதையின் கதைத்தலைவனான உதயணன், தன் வலிமையாலும், நண்பர்களின் உதவியாலும் சிறந்த முறையில் நல்லாட்சி நடத்தினான்.
- பெருங்கதையில் நான்கு போர்கள் நடைபெறுகின்றன. இப்போர்களின் மூலம் உதயணனின் வீரத்தையும், யூகி முதலான நண்பர்களின் சூழ்ச்சித் திறனையும் உணர முடிகிறது.

- சமணசமயத்தை முன்னிறுத்தும் நோக்கில் எழுதப்பட்ட பெருங்கதையில் சமணம் சார்ந்த கருத்துக்கள் நிரம்ப இடம்பெற்றுள்ளன.
- இருபத்துநான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றி வளர்த்ததாகக் கருதப்படும் சமண சமயத்தை, நாடெங்கும் பரவச் செய்தவர் இருபத்து நான்காவது தீர்த்தங்கரரான மகாவீரர் ஆவார்.
- மகாவீரரின் காலத்திற்குப்பின் சமணம் பலவாகப் பிளவுற்றது.
- சமணத்தின் வினைக் கொள்கை, சியாத்வாதக் கொள்கை போன்ற கொள்கைகள் பற்றிப் பெருங்கதையில் கூறப்பட்டுள்ளது.
- சமணர்கள் பின்பற்றும் மரபுகள் ஒருசில வெளிப்பட்டுள்ளன.
- அருக சமயக் கோயில்கள், அக்கோயில்களின் அமைப்பு முறை பற்றியும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.
- சமணர்களால் உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூவகை வழிபாட்டு நெறிகளும் பின்பற்றப்பட்டன.
- இயக்கன், இயக்கி போன்ற பரிவாரத் தெய்வங்கள் குறித்தும், பிற சமயத் தெய்வங்கள் குறித்தும் குறிக்கப்பட்டுள்ளன.
- கதைத் தலைவனான உதயணன், சிற்றின்பத்தில் திளைப்பவனாகவும், நான்கு பெண்களை மணம்புரிந்தவனாகவும் காட்டப்பட்டுள்ளமை, தலைமைப் பண்பிற்குச் சற்றுப் பொருந்தாமையாகத் தோன்றினும், வீரத்திலும், பிற நற்குணங்களிலும் மிக்கோனாகவே படைக்கப் பட்டுள்ளான்.
- உதயணனின் நண்பன் யூகி, நட்பிற்கு இலக்கணமாகவும், அரசியல் திறம் மிக்கவனாகவும், கதைத் தலைவனினும் சிறந்தவனாகவும் சித்திரிக்கப் பட்டுள்ளான்.
- வாசவதத்தை, பதுமாபதி, மானனீகை, விரிசிகை ஆகிய நால்வரும் அறிவிலும், அழகிலும், நற்பண்புகளிலும் சிறந்தவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

- கதையில் இடம்பெற்றுள்ள பிற துணைமைப் பாத்திரங்கள் தத்தமது குணநலன்களுக்கேற்ப கதையின் வளர்ச்சிக்குத் துணையாகப் படைக்கப்பட்டுள்ளனர்.
- இசை, ஓவியம், சிற்பம், கட்டடம், ஒப்பனை, சோதிடம் போன்ற கலைகளைப் பற்றியும் செய்திகள் நுண்ணிய முறையில் வெளிப்பட்டுள்ளன.
- தாலாட்டு, ஒப்பாரி, பழமொழி, விடுகதை போன்ற நாட்டுப்புறக் கூறுகளும், பெருங்கதையில் இடம் பெற்றுள்ளன.
- நெற்றியில் கடிதம் எழுதும் ஒரு புதிய உத்தியை வேளிர் கையாண்டுள்ளார். ஆயினும் காதலிக்கு மனைவியின் நெற்றியிலேயே கடிதம் எழுதுதல் என்பதைச் சற்றுத் தாழ்ந்த செயலாகவே கொள்ள முடிகிறது.
- தகவல் தொடர்பு பற்றிய சில செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.
- வானஊர்தி பற்றிய சிந்தனை வெளிப்பட்டுள்ளது.
- பல்துறைக் களஞ்சியம் என்று கூறத்தக்கதாய்ப் பெருங்கதை திகழ்கிறது. கொங்குவேளிர் ஒரு சிறந்த காவியப்புலவன் என்பதைப் பெருங்கதை உணர்த்தி நிற்கிறது.